Q.C-69

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test | Registration Department Test – Group-III (Without Books) | 147 |
|---|---|---|

Maximum Time: One and Half Hour

Maximum Marks: 60

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 60 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 60 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

QC- 069

1. Alteration of Chit Agreement can be done with the consent of
சீட்டு உடன்படிக்கையை மாற்றுவதற்கு சம்மதம் பெறவேண்டியது

(A) Foreman
சீட்டு நடத்துபவர்

(B) All the Subscribers
எல்லா சந்தாதாரர்கள்

(C) Both Foreman and Subscribers
சீட்டு நடத்துபவர் மற்றும் சந்தாதாரர்கள் ஆகிய இருவரும்

(D) Cannot be altered
மாற்ற இயலாது

2. Minimum Capital requirements for the commencement of a chit and creation of a reserve fund by a company is
ஒரு நிறுவனத்தால் சீட்டு உடன்படிக்கை துவங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச மூலதனம்

(A) Capital not less than one lakh
ரூ. 1 லட்சத்திற்கு குறையாத மூலதனம்

(B) Capital not less than three lakhs
ரூ. 3 லட்சத்திற்கு குறையாத மூலதனம்

(C) Capital not less than five lakhs
ரூ. 5 லட்சத்திற்கு குறையாத மூலதனம்

(D) No specified Capital required.
முதலீடு குறித்து எவ்வித வரையறையும் இல்லை

3. Filing of chit agreement is done by Foreman with
சீட்டு உடன்படிக்கை குறிப்பானது சீட்டு நடத்துபவரால் கோர்வை செய்யவேண்டியது

(A) State Government
மாநில அரசு

(B) Registrar
பதிவாளர்

(C) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

(D) Central Government
மத்திய அரசு

4. Foremen commission, should not exceed ———— % of chit amount
சீட்டு நடத்துபவர்க்குரிய தரகு, சீட்டுத் தொகையில் எத்தனை சதவிகிதத்தினை மிகக்கூடாது

(A) 1.5%

(B) 2.5%

(C) 5%

(D) 7%

5. Removal of Defaulting Subscribers can be done by the written notice of such removal given by the foreman should be filed with Registrar within ———— of the date of such of removal.
தவணைத்தொகையை செலுத்தத் தவறிய சந்தாதாரரை சீட்டு நடத்துபவர் நீக்கம் செய்யும்போது அது குறித்த அறிவிப்பினை எத்தனை நாட்களுக்குள் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும்

(A) 60 days
60 நாட்கள்

(B) 30 days
30 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 14 days
14 நாட்கள்

6. Under section 70 : Appeal against the decision of the Registrar or Nominee should be done with
பிரிவு 70-ன் கீழ் மாவட்டப்பதிவாளர் அல்லது அவரது பிரதிநிதியின் ஆணைக்கெதிரான மேல்முறையீடு யாரிடம் செய்யப்படவேண்டும்

(A) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

(B) High Court
உயர்நீதிமன்றம்

(C) State Government
மாநில அரசு

(D) Income Tax Department
வருமானவரித்துறை

7. The State Government by notification in the Official Gazette, can make Rules for giving effect to the provisions of the Chit Fund Act. It can be done in consultation with
மாநில அரசானது சீட்டு நிதியங்கள் சட்டத்தை அமல்படுத்த விதிகளை இயற்றி அரசிதழில் அறிவிப்பு வெளியிடலாம். இம்மாற்றம் கொண்டுவர ஆலோசிக்க வேண்டியது

(A) Central Government
மத்திய அரசு

(B) Income Tax Department
வருமானவரித் துறை

(C) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

(D) Registrar
பதிவாளர்

8. A Society Memorandum, by-laws etc., to be filed with the
ஒரு சங்கத்தின் விவரக் குறிப்பு, துணை விதிகள் மற்றும் இதர இனங்கள் யாரிடம் கோர்வை செய்யவேண்டும்

(A) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(B) State Government
மாநில அரசு

(C) Inspector General of Registration
பதிவுத்துறைத் தலைவர்

(D) High Court
உயர்நீதிமன்றம்

9. Cancellation of registration of society carrying an unlawful activities falls under Section
சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் சங்கத்தினை பின்வரும் எந்தப்பிரிவின் கீழ் ரத்து செய்யலாம்

(A) Section 35
பிரிவு 35

(B) Section 38
பிரிவு 38

(C) Section 40
பிரிவு 40

(D) Section 34
பிரிவு 34

10. No Prosecution shall be instituted under this Act without the previous sanction in writing of the
ஒரு சங்கத்தின் மீது குற்ற வழக்கு தொடர பின்வரும் எவரிடமிருந்து எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறவேண்டும்

(A) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(B) Inspector General of Registration
பதிவுத்துறைத்தலைவர்

(C) State Government
மாநில அரசு

(D) High Court
உயர்நீதிமன்றம்

11. Filing of Special Resolution is done with
சிறப்புத் தீர்மானத்தினை யாரிடம் கோர்வை செய்திட வேண்டும்

(A) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(B) State Government
மாநில அரசு

(C) Inspector General of Registration
பதிவுத்துறைத் தலைவர்

(D) Reserve Bank of India
இந்திய ரிசர்வ் வங்கி

12. By general or special order exemption whether prospectively or retrospectively, can be given to any provisions of this Act (or) Rules by
ஒரு பொது அல்லது சிறப்பு ஆணை மூலம் சங்க சட்டப்பிரிவு மற்றும் விதிகளுக்கு நடப்பு நாளிலோ அல்லது முன்தேதியிட்டோ விலக்களிக்க அதிகாரம் யாரிடம் உள்ளது

(A) State Government
மாநில அரசு

(B) Inspector General of Registration
பதிவுத்துறைத் தலைவர்

(C) District Registrar
மாவட்டத் பதிவாளர்

(D) High Court
உயர்நீதிமன்றம்

13. The term of office of the members of the Committee shall not ———— from the date of their appointment
குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் அவர்களது நியமன நாளிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு மிகக்கூடாது

(A) Exceed 5 years
5 ஆண்டுகள்

(B) Exceed 3 years
3 ஆண்டுகள்

(C) Exceed 1 year
1 ஆண்டு

(D) Exceed 10 years
10 ஆண்டுகள்

14. According to Society Registration Act, a Special resolution means,
சங்கப்பதிவு சட்டத்தின்படி ஒரு சிறப்பு தீர்மானம் என்பது

(A) A Resolution passed by majority of not less than 3/4th of such members of a registered society entitled to vote as are present at a general meeting
பொதுக்குழு கூட்டத்தில் ஆஜராகி ஓட்டுரிமை பெற்ற உறுப்பினர்களில் 4-ல் 3 பங்கு உறுப்பினர்கள் பெருன்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(B) A Resolution passed by majority of not less than 2/4th of such members present at a general meeting
பொதுக்குழு கூட்டத்தில் ஆஜரான ஓட்டுரிமை பெற்ற உறுப்பினர்களில் 4-ல் 2 பங்கு உறுப்பினர்கள் பங்கேற்று அதில் பெருன்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(C) A Resolution passed by majority of not less than 3/4th of such members present at a general meeting
பொதுக்குழு கூட்டத்தில் ஆஜரான உறுப்பினர்களில் 4-ல் 3 பங்கு உறுப்பினர்கள் பெருன்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(D) A Resolution passed by majority of not less than 2/3rd of such members of a registered society entitled to vote as are present at a general meeting.
பொதுக்குழு கூட்டத்தில் ஆஜரான ஓட்டுரிமை பெற்ற உறுப்பினர்களில் 3-ல் 2 பங்கு உறுப்பினர்கள் பங்கேற்று அதில் பெருன்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

15. The minimum number of members required to form a society under Society Registration Act is
சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் ஒரு சங்கம் ஆரம்பிக்க தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை

(A) 10
(B) 7
(C) 6
(D) 20

16. Every registered society shall have a committee of not less than ———— members to manage its affairs
ஒரு பதிவு பெற்ற சங்கத்தை நிர்வகிக்க தேவையான குறைந்தபட்ச நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை

(A) 2
(B) 7
(C) 3
(D) 4

17. Compulsory registration of certain societies are necessary, if their gross annual income or expenditure in any financial year is not less than
ஒரு சங்கத்தின் ஆண்டு வருமானம் அல்லது செலவு ஒரு நிதியாண்டில் எந்தத் தொகையைவிட மிகுதியாக இருந்தால் கட்டாயமாக அச்சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) Ten thousand
பத்தாயிரம்
(B) Twenty five thousand
இருபத்தைந்தாயிரம்
(C) Fifty thousand
ஐம்பதாயிரம்
(D) One Lakh
ஒரு லட்சம்

18. What is the Quorum for the General Body Meeting
பொதுக்குழு கூட்டம் நடத்துவதற்கு தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை

(A) 1/3rd of the members of the society
3-ல் 1 பங்கு சங்க உறுப்பினர்கள்
(B) 1/4th of the members of the society
4-ல் 1 பங்கு சங்க உறுப்பினர்கள்
(C) 2/3rd of the members of the society
3-ல் 2 பங்கு சங்க உறுப்பினர்கள்
(D) As mentioned in the bylaw of the particular society
தொடர்புடைய சங்கத்தின் துணை விதிகளில் குறிப்பிட்டவாறு

19. In the absence of an agreement, Interest on loan advanced by the partner to the firm is allowed at the rate of
ஒரு உடன்படிக்கை இல்லாத நிலையில் பங்குதாரர் கூட்டாண்மை நிறுவனத்திற்கு வழங்கிய கடனுக்காக அனுமதிக்கப்படும் வட்டி விகிதம்

(A) 12%
(B) 9%
(C) 6%
(D) 5%

20. Where no provisions is made by contract between the partners for the duration of their partnership, or for the determination of their partnership, the partnership is
பங்குதாரர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் அவர்களது கூட்டாண்மை காலம் குறித்தோ அல்லது அவர்களது கூட்டணியின் உறுதிப்பாடு குறித்தோ எந்தவொரு ஒப்பந்தமும் இல்லாத நிலையில் கூட்டாண்மை என்பது

(A) Particular Partnership
குறிப்பிட்ட கூட்டாண்மை

(B) Partnership at Will
விருப்ப கூட்டாண்மை

(C) Existence of Partnership
நடப்பில் உள்ள கூட்டாண்மை

(D) Association of Partnership
பங்குதாரர்களின் அமைப்பு

21. A partnership cannot be constituted by
ஒரு கூட்டாண்மை நிறுவனம் பின்வரும் நபர்களால் உருவாக்கிட இயலாது

(A) Two individuals
2 தனிநபர்கள்

(B) Two Hindu joint families
2 இந்து கூட்டுக் குடும்பங்கள்

(C) Both (A) and (B)
(A), (B) ஆகிய இரண்டும்

(D) Neither (A) nor (B)
(A)ம் அல்ல (B)ம் அல்ல

22. A partner can examine the books etc., of the partnership firm
ஒரு பங்குதாரர் கூட்டாண்மை நிறுவன கணக்குகளை எத்தனை முறை சரிபார்க்கலாம்

(A) Any number of times without restriction
வரையறையின்றி எத்தனை முறை வேண்டுமென்றாலும்

(B) Once in a year
வருடம் ஒரு முறை

(C) Once in a month
மாதம் ஒரு முறை

(D) Once in a week
வாரம் ஒரு முறை

23. The provision of fraudulent transfer is dealt in
மோசடி சொத்து மாற்றம் குறித்து எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது

(A) Section 53 of the Transfer of Property Act 1882
சொத்து பரிமாற்றுச்சட்டம் 1882 பிரிவு 53

(B) Section 48 of the Transfer of Property Act 1882
சொத்து பரிமாற்றுச்சட்டம் 1882 பிரிவு 48

(C) Section 51 of the Transfer of Property Act 1882
சொத்து பரிமாற்றுச்சட்டம் 1882 பிரிவு 51

(D) Section 49 of the Transfer of Property Act 1882.
சொத்து பரிமாற்றுச்சட்டம் 1882 பிரிவு 49

24. In the case of Transfer of Property the seller is
சொத்துரிமை மாற்றம் விஷயத்தில் விற்பனையாளர்

(A) not entitled to rents and profits of the property till the ownership thereof passes to buyer
சொத்தை வாங்கியவருக்கு சொத்தின் உரிமையை முழுமையாக ஒப்படைக்கும்வரை விற்பனையாளருக்கு அச்சொத்திலிருந்து வாடகை மற்றும் லாபம் பெற தகுதியானவரல்ல

(B) is entitled to rents and profits of the property till the ownership thereof passes to buyer
சொத்தை வாங்கியவருக்கு சொத்தின் உரிமையை முழுமையாக ஒப்படைக்கும்வரை விற்பனையாளருக்கு அச்சொத்திலிருந்து வாடகை மற்றும் லாபம் பெற தகுதியானவர்

(C) is entitled to rents or other profits
வாடகை மற்றும் லாபம் பெற தகுதியானவர்

(D) none of the above
மேற்கூறியவை எதுவுமல்ல

25. Under the provisions of the Transfer of Property Act 1882, the unborn person acquires vested interest on transfer for his benefit
சொத்து மாற்று சட்டம் 1882-ன் கீழ் பிறக்காத நபர் ஒரு சொத்து மாற்றத்தின்மீது தன்னல அக்கறை எப்போது பெறுகிறார்

(A) Upon his birth
பிறந்தவுடன்

(B) 7 Days after his birth
பிறந்த 7 நாட்களுக்குப்பின்

(C) No such provision is made
எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை

(D) 1 year after his birth
பிறந்து ஒரு வருடத்திற்குப்பின்

26. Under the provisions of the Transfer of Property Act 1882,
சொத்து மாற்று சட்டம் 1882-ன் கீழ் உள்ள ஷரத்துகளின்படி

(A) A Public office cannot be transferred
ஒரு பொது அலுவலப்பணியை மாற்ற முடியாது

(B) A Public office can be transferred
ஒரு பொது அலுவலகப் பணியை மாற்ற மு[illegible]யும்

(C) Such provision is absent in this Act
இத்தகைய விதிமுறை இச்சட்டத்தில் இல்லை

(D) None of the above
மேற்கண்ட எதுவுமில்லை

27. According to section 122 of the transfer of Property Act, Gift includes
சொத்து மாற்று சட்டம் பிரிவு 122-ன்படி தானம் என்பது

(A) Only immovable property
அசையாச் சொத்து மட்டுமே

(B) Only movable property
அசையும் சொத்து மட்டுமே

(C) Movable or immovable property
அசையும் அல்லது அசையாச் சொத்து

(D) Land only
நிலம் மட்டுமே

28. In case of Gift, one dies before the acceptance then
தானம் விஷயத்தில் தானம் பெறுபவர் அதனைப் பெறுவதற்குமுன் இறந்துவிடுகிறார் என்றால்

(A) Gift is valid
தானம் செல்லுபடியாகும்

(B) Gift is void
தானம் செல்லாததாகும்

(C) Gift is reduced
தானம் குறைக்கப்படும்

(D) Court has to decide
நீதிமன்றத்தால் தீர்மானிக்க வேண்டும்

29. A Decree becomes final
ஒரு தீர்ப்பாணை எப்போது இறுதியாகிறது

(A) When it conclusively determines the rights of the parties
அது கட்சிக்காரர்களின் உரிமைகளை உறுதியாக நிர்ணயிக்கும்போது

(B) When no appeal has been preferred against the decree
தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படவில்லையெனில்

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) Neither (A) nor (B)
(A)ம் அல்ல (B)ம் அல்ல

30. Foreign judgment as defined under section 2(6) of CPC means
உரிமையியல் விசாரணைச் சட்டம் பிரிவு 2(6)-ன்படி அயல்நாட்டுத் தீர்ப்பு என்பது

(A) Judgment given by an Indian Court in respect of Foreigners
வெளிநாட்டவர் குறித்து இந்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

(B) Judgment given by a Foreign Court
அயல்நாட்டில் வழங்கப்பட்ட ஓர் தீர்ப்பு

(C) Both (A) and (B)
(A), (B) ஆகிய இரண்டும்

(D) Neither (A) nor (B)
(A)ம் அல்ல (B)ம் அல்ல

31. Judgment under section 2(9) means
பிரிவு 2(9)-ன் கீழ் தீர்ப்பு என்பது

(A) Counter Affidavit
எதிர்வாதுரை

(B) Statement of grounds of an order or decree
தீர்ப்பாணை அல்லது கட்டளைக்கு நீதிபதி வழங்கியுள்ள அடிப்படை காரணம் கொண்ட உரை

(C) Dismissal of an appeal summarily
மொத்தமாக மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்வது

(D) Report of the commission
ஆணையத்தின் அறிக்கை

32. The expenses of the witness for whom the summons have to be obtained is to be, under order XVI, Rule 2 of CPC, Borne
உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆணை 16 விதி 2-ன் கீழ் சாட்சியை வரவழைக்கும் கட்டளையின் பேரில் சாட்சிக்கு எழும் செலவுத்தொகை செலுத்த வேண்டியது

(A) By the defendant
பிரதிவாதி

(B) By the plaintiff
வாதி

(C) By the party applying for the summons
சாட்சியை வரவழைக்கும் கட்டளைக்கு விண்ணப்பிக்கும் கட்சிக்காரர்

(D) By the Court
நீதிமன்றம்

33. The court may issue a commission. Regarding this one of the following is wrong
நீதிமன்றம் ஆணையம் அமைக்க வழிவகை உள்ளது. இது தொடர்பாக பின்வருவனவற்றுள் தவறானது எது?

(A) to examine any person
எந்த ஒரு நபரையும் விசாரிக்க

(B) to make a partition
பாகப்பிரிவினை செய்திட

(C) to examine or adjust accounts
விசாரித்து கணக்குகளை சரிசெய்திட

(D) to perform all judicial act
அனைத்து நீதித்துறை செயல்களையும் செய்திட

34. A disputed handwriting can be proved
ஒரு சர்ச்சைக்குட்பட்ட கையெழுத்தினை நிரூபிக்க

(A) by calling an expert
ஒரு வல்லுநரை அழைப்பதன் மூலம்

(B) by examining a person acquainted with handwriting of the writer of the qualified document
தொடர்புடைய ஆவணத்தினை எழுதியவர் குறித்த கையெழுத்தினை நன்கு அறிந்த ஒருவரை விசாரணை செய்து

(C) by comparison of the two admitted and disputed handwriting
ஏற்கப்பட்ட மற்றும் சர்ச்சைக்குரிய எழுத்துப்பிரதியை ஒப்பிட்டு பார்ப்பதன் மூலம்

(D) all the above
மேற்கண்ட அனைத்தும்

35. Oral evidence under Section 60 of evidence act may be
சாட்சியச் சட்டம் பிரிவு 60-ன் கீழ் வாய்மொழிச் சாட்சியம் என்பது

(A) Direct only
நேரடியாக மட்டும்

(B) Hearsay only
கேட்கப்பட்டதாக மட்டும்

(C) Both (A) and (B)
(A), (B) ஆகிய இரண்டும்

(D) Neither (A) nor (B)
(A)ம் அல்ல (B)ம் அல்ல

36. Secondary evidence of the document means
இரண்டாம் நிலை சாட்சிய ஆவணங்கள் என்பது

(A) Copies of that document
ஆவணங்களின் நகல்கள்

(B) Oral account of the contents of the document
ஆவணத்தின் உள்ளடக்கம் குறித்த வாய்மொழி விவரிப்பு

(C) Both (A) and (B)
(A), (B) ஆகிய இரண்டும்

(D) Neither (A) nor (B)
(A)ம் அல்ல (B)ம் அல்ல

37. Public documents are mentioned in
பொது ஆவணங்கள் குறித்து எப்பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) Section 72 of evidence act
சாட்சியச் சட்டத்தின் 72-வது பிரிவு

(B) Section 75 of evidence act
சாட்சியச் சட்டத்தின் 75-வது பிரிவு

(C) Section 73 of evidence act
சாட்சியச் சட்டத்தின் 73-வது பிரிவு

(D) Section 74 of evidence act
சாட்சியச் சட்டத்தின் 74-வது பிரிவு

38. A Witness who is unable to speak is called
ஒரு சாட்சியாளர் பேச இயலாதவர் எனில்

(A) Deaf witness
காதுகேளாதவர் சாட்சி

(B) Dumb witness
ஊமை சாட்சி

(C) Hostile witness
எதிரான சாட்சி

(D) Unreliable witness
நம்ப இயலாத சாட்சி

39. "If it refers to a fact which could be seen, it must be the evidence of the witness who says he saw it"
ஒரு பொருண்மை காணத்தகுந்ததாகவும் தான் அதனை பார்த்ததாகவும், குறிப்பிடும் சாட்சியாளரின் ஆதாரமாக கொள்ளும்போது அது எவ்வகை சாட்சியம்

(A) Document evidence
ஆவண சாட்சியர்

(B) Written evidence
எழுத்து மூலமான சாட்சியம்

(C) Oral evidence
வாய்மொழி சாட்சியம்

(D) Witness
சாட்சி

40. Persons required to register birth and death in respect in jail is
சிறைச்சாலையில் பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்பவர்

(A) Jailor in-charge
ஜெயிலர் பொறுப்பில் இருப்பவர்

(B) Deputy Inspector general of police
டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்

(C) Inspector of jail
சிறைச்சாலை ஆய்வாளர்

(D) Magistrate
நீதிபதி

41. In the case of any child born outside India in respect of whom information has not been received by him under the rules relating to the registration of such citizens at Indian Consulates, If the parents of the child returns to the India with a view to settling therein, they may at time within ———— days from the date of the arrival of the child in India can apply to register
இந்தியாவிற்கு வெளியில் பிறந்த குழந்தையை பற்றி இந்திய தூதரங்களில் தகவல் பதிவு செய்யவில்லையெனில் அந்தக் குழந்தையை பொறுத்த நேர்வில் குழந்தையின் பெற்றோர்கள் இந்தியாவிற்கு நிலையாக தங்கியிருக்கும் நோக்கத்துடன் திரும்புவாரானால் குழந்தை இந்தியாவிற்கு வந்து சேர்ந்த தேதியிலிருந்து ———— நாட்களுக்குள் பதிவு செய்ய முறையிட வேண்டும்.

(A) 120 days
120 நாட்கள்

(B) 90 days
90 நாட்கள்

(C) 60 days
60 நாட்கள்

(D) 45 days
45 நாட்கள்

42. The Special Marriage Act 1954 replaced which of the following Act
தனித் திருமணச் சட்டம் 1954 கீழ்க்கண்ட எந்த சட்டத்திற்கு மாற்றாக கொண்டுவரப்பட்டது

(A) Saradha Act
சாரதா சட்டம்

(B) Special Marriage Act 1872
தனி திருமண சட்டம் 1872

(C) Sati Abolition Act
உடன் கட்டை ஏறுதல் ஒழிப்புச்சட்டம்

(D) Foreign Marriage Act
வெளிநாட்டவர் திருமணச் சட்டம்

43. If the marriage officer refuses to register a marriage under Special Marriage Act means one can appeal to
ஒரு திருமண அலுவலர் தனி திருமணச் சட்டத்தின்கீழ் ஒரு திருமணத்தை பதிவு செய்ய மறுத்தால் அதற்கு எதிராக யாரிடம் முறையிடலாம்

(A) District Court
மாவட்ட நீதிமன்றம்

(B) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(C) High Court
உயர்நீதிமன்றம்

(D) Inspector General of Registration
பதிவுத்துறைத் தலைவர்

44. What is the age limit of marriages celebrated in other forms
தனித் திருமணச் சட்டத்தின்கீழ் ஏனைய முறைகளில் திருமணத்தை பதிவு செய்திட தேவையான வயது வரம்பு

(A) The male must have completed the age of 21 years and the female 18 years
ஆண் 21 வயது பெண் 18 வயது பூர்த்தி செய்திருக்கவேண்டும்

(B) Both must have completed the age of 21 years
இருபாலரும் 21 வயதை நிறைவு செய்திருக்கவேண்டும்

(C) Both must have completed the age of 18 years
இருவருமே 18 வயதை நிறைவு செய்திருக்கவேண்டும்

(D) Both must have completed the age of 20 years
இருவரும் 20 வயதை நிறைவு செய்திருக்கவேண்டும்

45. The Hindu Marriage Act of 1955 applies to
இந்து திருமண சட்டம் 1955 யார் யாருக்கு பொருந்தும்

(A) Hindus only
இந்துக்கள் மட்டும்

(B) Hindus, Buddhists, Jains and Parsis
இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பார்சிகள்

(C) Hindus, Buddhists, Jains and Sikhs
இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள்

(D) Hindus, Buddhists, Jains and Jews
இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் யூதர்கள்

46. The number of witness required for the registration of Marriage under Hindu Marriage Act
இந்து திருமணத்தை பதிவு செய்திட தேவையான சாட்சிகள் எண்ணிக்கை

(A) 3
(B) 2
(C) 4
(D) 5

47. Sapinda relationship extends in the line of ascent to
விலக்கப்பட்ட உறவு என்பது எத்தனை தலைமுறை மேல்நோக்கி நீடிக்கும்

(A) 3 Degrees through the mother and 5 Degrees through the Father
தாய்வழி 3 தலைமுறை மற்றும் தந்தையின் வழி 5 தலைமுறை

(B) 2 Degrees through the mother and 3 Degrees through the Father
தாய்வழி 2 தலைமுறை மற்றும் தந்தையின் வழி 3 தலைமுறை

(C) 3 Degrees through the mother and 4 Degrees through the Father
தாய்வழி 3 தலைமுறை தந்தை வழி 4 தலைமுறை

(D) 5 Degrees through the mother and 7 Degrees through the Father
தாய்வழி 5 தலைமுறை மற்றும் தந்தையின் வழி 7 தலைமுறை

48. Any Person aggrieved by the order of the Sub-Registrar can appeal to District Registrar. The appeal should be preferred within
தமிழ்நாடு திருமணங்கள் பதிவு சட்டத்தின்கீழ் சார்பதிவாளர் உத்தரவில் மனநிறைவு இல்லாத எந்த நபரும் மாவட்டப்பதிவாளரிடம் முறையீடு செய்யலாம். அம்மேல்முறையீடு எத்தனை நாட்களுக்குள்

(A) 45 Days
45 நாட்கள்

(B) 30 Days
30 நாட்கள்

(C) 60 Days
60 நாட்கள்

(D) 90 Days
90 நாட்கள்

49. Any correction can be made in the register of marriage or in the certificate of registration shall be done by
திருமண பதிவேட்டில் எந்த ஒரு திருத்தமோ அல்லது பதிவு சான்றிதழில் திருத்தமோ யாரால் செய்யப்பட வேண்டும்

(A) Inspector General of Registration
பதிவுத்துறைத்தலைவர்

(B) Sub-Registrar
சார்பதிவாளர்

(C) District Registrar
மாவட்டப்பதிவாளர்

(D) Deputy Inspector General of Registration
துணைப்பதிவுத்துறைத் தலைவர்

50. The number of witness required for Registration of marriage under TamilNadu Marriage Act is
தமிழ்நாடு திருமண பதிவு சட்டத்தின் கீழ் திருமணம் பதிவு செய்ய தேவையான சாட்சிகளின் எண்ணிக்கை

(A) 2

(B) 3

(C) 4

(D) 5

51. Under the Christian Marriage Act, the time of solemnizing a marriage is
கிறித்தவர் திருமண சட்டத்தின்கீழ் திருமண சமயச் சடங்கு நேரம்

(A) Four in the morning to Six in the evening
காலை 4 முதல் மாலை 6 மணி வரை

(B) Six in the morning to Five in the evening
காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை

(C) Seven in the morning to Six in the evening
காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை

(D) Six in the morning to Seven in the evening
காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை

52. Under the Christian Marriage Act, Marriage registrars and Senior Marriage registrars are appointed by
கிறித்தவர் திருமண சட்டத்தின் கீழ் யாரால் திருமணப்பதிவாளர்கள் மற்றும் மூத்த திருமண பதிவாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்

(A) Central Government
மத்திய அரசு

(B) State Government
மாநில அரசு

(C) High court
உயர்நீதிமன்றம்

(D) Christian Priests
கிறித்தவ பாதிரியார்கள்

53. The place of solemnization of marriage under Christian Marriage Act is
கிறித்தவ திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொள்ளும் இடம்

(A) Bride's residence
மணமகள் வீடு

(B) Bride groom's residence
மணமகன் வீடு

(C) Church
தேவாலயம்

(D) Marriage hall
திருமண மண்டபம்

54. Parsi Chief Matrimonial Courts are constituted under
பார்சி தலைமை திருமண நீதிமன்றங்கள் பின்வரும் பிரிவின்படி அமைக்கப்படுகின்றன

(A) Section 16
பிரிவு 16

(B) Section 19
பிரிவு 19

(C) Section 17
பிரிவு 17

(D) Section 20
பிரிவு 20

55. Appointment of delegates shall be done for
பிரதிநிதிகளின் நியமனம் ———————— ஆண்டுகளுக்கு செய்யப்படுகிறது.

(A) 5 years
5 ஆண்டுகள்

(B) 6 years
6 ஆண்டுகள்

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

56. Under the Dowry Prohibition Act, the penalty for giving or taking Dowry is
வரதட்சணை தடுப்புச் சட்டத்தின்கீழ் வரதட்சணை கொடுக்கும் அல்லது வாங்கிக்கொள்வதற்கான தண்டனை

(A) Imprisonment for a term which shall not be less than 5 years and with fine
5 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் அபராதமும்

(B) Imprisonment for a term which shall not be less than 3 years and with fine
3 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் அபராதமும்

(C) Imprisonment for a term which shall not be less than 2 years and with fine
2 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் அபராதமும்

(D) Imprisonment for a term which shall not be less than 6 years and with fine
6 ஆண்டுகளுக்கு குறையாத சிறைத்தண்டனை மற்றும் அபராதம்

57. Atleast how many general body meetings have to be convened in every financial year?
ஒரு நிதியாண்டிற்கு குறைந்தபட்சம் எத்தனை பொதுக்குழுக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்?

(A) 1
(B) 2
(C) 4
(D) 3

58. Time limit for giving objection to intended marriage from the date of notice
விருப்ப திருமணத்திற்கு அறிவிப்பின்மீது ———————— நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவித்திடலாம்.

(A) 45 days
45 நாட்கள்

(B) 20 days
20 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 32 days
32 நாட்கள்

59. Every Hindu Marriage shall be registered with the marriage registrar by the parties within ———— months from the date of solemnization of the marriage.
இந்து திருமணம், திருமணம் செய்யப்பட ———— மாதத்திற்குள் திருமணப் பதிவாளரிடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) 3
(B) 6
(C) 10
(D) 9

60. Declaratoin form to be filed with the Registrar, at the close of financial year is
கீழ்க்கண்ட எந்த படிவத்தில், உறுதிமொழி படிவம் நிதி ஆண்டின் முடிவின்போது பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும்?

(A) Form I
படிவம்-I
(B) Form IIA
படிவம்-IIA
(C) Form III
படிவம்-III
(D) Form IV
படிவம்-IV

069/DD/21

T.C : 147

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## REGISTRATION DEPARTMENT TEST – GROUP – III

(With Books)

Maximum Time : 1 hour | Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any EIGHT questions.**

எவையேனும் எட்டு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(8 × 5 = 40)**

1. What are the conditions to be fulfilled before solemnization under a Hindu Marriage Act?

   இந்து திருமண சட்டத்தின்கீழ் திருமணத்தினை முறைப்படுத்திட நிறைவு செய்யவேண்டிய நிபந்தனைகள் யாவை?

**[Turn over**

2. What are the mutual rights and liabilities of the partners under the Indian Partnership Act?

இந்திய கூட்டாண்மை நிறுவன சட்டத்தின்கீழ் பங்குதாரர்களின் பரஸ்பர உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை?

3. What are the accounts to be maintained by the society?

ஒரு பதிவு பெற்ற சங்கம் பராமரிக்கவேண்டிய கணக்குகள் யாவை?

4. What are the conditions to be seen before registering a Marriage celebrated in other forms under the Special Marriage Act?

தனித்திருமண சட்டத்தின்கீழ் இதர வகையில் நடைபெற்ற திருமணத்தை பதிவு செய்யும் முன் கவனிக்கவேண்டிய நிபந்தனைகள் எவை?

5. Write the duties of foreman under Chit Fund Act 1982?

சிட்பண்ட் சட்டம் 1982-ன் கீழ் சீட்டு நடத்துபவர் கடமைகளை எழுதுக.

6. What are the various type of mortgages mentioned in the Transfer of Property Act?

சொத்துரிமை மாற்று சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான அடைமானங்கள் எவை?

7. Define Dowry.

வரதட்சணை என்பதை வரையறுக்கவும்.

8. List the persons exempted from personal appearance in Court.

நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களின் பட்டியலை அளிக்கவும்.

9. Define 'Sale'. How the sale can be made?

'விற்பனை' என்பதை வரையறுக்கவும். விற்பனையை எவ்வாறு செயல்படுத்த முடியும்?

10. Write the procedure for removal of defunct registered societies.

செயல்படாத பதிவு செய்யப்பட்ட சங்கங்களை நீக்கம் செய்வது தொடர்பான நடைமுறைகளை எழுதுக.

---